
## நிலவின் மேற்பரப்பில் 8 மீட்டர் தூரம் நகர்ந்தது ரோவர் வாகனம்: அனைத்து செயல்பாடுகளும் சீராக இருப்பதாக இஸ்ரோ தகவல்


இஸ்ரோ வெளியிட்டுள்ள, லேண்டரில் இருந்து ரோவர் வாகனம் கீழ் இறங்கிய படம்.

**சென்னை:** நிலவில் தரையிறங்கி ஆராய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வுநிறுவனம் (இஸ்ரோ) உருவாக்கிய சந்திரயான்-3 விண்கலம், கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. 41 நாள் பயணத்துக்கு பிறகு, நிலவின் தென்துருவப் பகுதிக்கு அருகே சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் பாகம் ஆக.23-ம் தேதி மாலை 6.04 மணிக்குவெற்றிகரமாக தரையிறங்கியது. இதன்மூலம் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் சாதனையை இந்தியா படைத்தது.

இதற்கிடையே லேண்டர் கலனில் இருந்து ரோவர் கீழிறங்கும் படங்களை தொகுத்து அதன் காணொலியை இஸ்ரோ நேற்று காலை வெளியிட்டது. அதில் லேண்டரின் சாய்வுதளம் வழியாக அதனுள் இருந்த ரோவர் வாகனம் எளிதாக வெளியேறியதை தெளிவாக காண முடிகிறது. மேலும், ரோவர்சாய்வு தளத்தில் இறங்கும்போது அதிலிருந்த சோலார் தகடுகள் மின்சார சக்தியை (சார்ஜ்) பெறுவதற்காக சூரியன் இருக்கும் திசையை நோக்கி சரியான முறையில் திரும்பியது. இந்த நிகழ்வுகள் லேண்டரில்இருந்த இமேஜிங் கேமரா மூலம் துல்லியமாக படம் பிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர நிலவின் சுற்றுப்பாதையில் சுற்றிவரும் சந்திரயான்-2 ஆர்பிட்டர் விண்கலம் மூலம் 2 மணிநேரத்துக்கு ஒருமுறை லேண்டர் மற்றும் ரோவர் வாகனம் தொடர்ந்துகண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்விரு கலன்களும் தங்கள் ஆய்வில் கிடைக்கும் தரவுகளைசீரிய இடைவெளியில் புவிக்கு அனுப்பிவருகின்றன.

**அரிய தகவல்கள் கிடைக்கும்:** இதில் ரோவர் வாகனம் லேண்டர்வழியாகவே இஸ்ரோவுக்கு தகவல்களை வழங்கும். அந்தவகையில் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து செல்லும்போது ரோவரின் சென்சார்கள் சேகரித்த சில தரவுகள் மற்றும் லேண்டர் எடுத்த பல்வேறு புகைப் படங்கள் இதுவரை நமக்கு கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த கலன்களின் ஆயுட்காலம் இன்னும் 12 தினங்கள் வரை இருப்பதால்நிலவு பற்றிய பல்வேறு அரிய தகவல்கள் வரும் நாட்களில் கிடைக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் ரோவர் வாகனம்நிலவில் 8 மீட்டர் தூரம் வரை நகர்ந்துள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. இதுதொடர்பாக இஸ்ரோ நேற்று மாலை வெளியிட்ட அறிவிப்பில், ‘‘ரோவர் வாகனத்தின் அனைத்து செயல்பாடுகளும் திட்டமிட்டபடி சீராக உள்ளன. நிலவின் மேற்பரப்பில் ரோவர் சுமார் 8 மீட்டர் தூரத்தை வெற்றிகரமாக கடந்துள்ளது. மேலும், ரோவரில் இருந்த லிப்ஸ் மற்றும் ஏபிஎக்ஸ்எஸ் சாதனங்களின் ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக சந்திரயான்-3 திட்டத்தில் இடம்பெற்ற உந்துவிசைகலன், லேண்டர் மற்றும் ரோவர் கலன்களில் உள்ள அனைத்து ஆய்வுக் கருவிகளும் சிறப்பாக செயல்படுகின்றன’’ என்று கூறப்பட்டுள்ளது.

**பிரதமர் மோடி இஸ்ரோ வருகை:** சந்திரயான்-3 லேண்டர் விண்கலம் நிலவில் தரையிறங்கிய போது, வெளிநாடு சுற்றுப் பயணத்தில் இருந்த பிரதமர் நரேந்திர மோடி,காணொலி காட்சி வாயிலாக நேரலையில் பங்கேற்று

சிறப்புரையாற்றினார். இன்று நாடு திரும்பும்பிரதமர் மோடி நேரடியாக பெங்களூரு சென்று, அங்குள்ள இஸ்ரோஆய்வு மையத்தில் விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர்களுடன் கலந்துரையாட உள்ளார்.

**ஆர்பிட்டர் அனுப்பிய படத்தை நீக்கிய இஸ்ரோ:** சந்திரயான்-2 விண்கலத்தின் ஆர்பிட்டர் தற்போது நிலவின் சுற்றுப்பாதையில் வலம்வந்து ஆய்வு செய்துவருகிறது. இந்த ஆர்பிட்டர் கலன், ஆக.23-ம் தேதி நிலவில் தரையிறங்கிய லேண்டரை அன்று இரவு 10.17 மணியளவில் படம் பிடித்து அனுப்பியது. அந்த படத்தை இஸ்ரோ தனது ட்விட்டர் பக்கத்தில் நேற்று காலை வெளியிட்டது. ஆர்பிட்டர் ஒஎச்ஆர்சி உயர் தெளிவுத்திறன் கொண்ட கேமரா மூலம் எடுக்கப்பட்ட இந்த படங்களை அடுத்த சில நிமிடங்களில் இஸ்ரோ நீக்கிவிட்டது குறிப்பிடத்தக்கது.

## காலை உணவு திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாக்கம் - 17 லட்சம் மாணவர்கள் பயன்



**நாகப்பட்டினம்**: நாகை மாவட்டம் திருக்குவளையில், முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கல்வி கற்க எந்த காரணமும் தடையாக இருக்க கூடாது என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாகை மாவட்டம் திருக்குவளையில், முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். மாணவ, மாணவிகளுக்கு உணவு பரிமாறி, அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டார். அவர்களுடன் உரையாடினார்.

பின்னர், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த திருக்குவளையில், அவர் படித்த பள்ளியில் காலை உணவு திட்டத்தை விரிவாக்கம் செய்து வைப்பது பெருமையாக இருக்கிறது. இத்திட்டம் எனக்கு மிகுந்த மனநிறைவை தருகிறது.

கடந்த ஆண்டு அண்ணா பிறந்தநாளில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தேன். இப்போது அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்துள்ளோம். இதனால், தமிழகம் முழுவதும் 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் படிக்கும் 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுவார்கள். இந்த திட்டத்துக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதை ஒதுக்கீடு என்பதைவிட முதலீடு என்றே சொல்ல விரும்புகிறேன். மாணவர்களின் அறிவை, உள்ளத்தை மேம்படுத்த அரசு முதலீடு செய்துள்ளது. அது நிச்சயம் நாட்டுக்கு லாபம் தரும் வகையிலான ஆற்றலாக, திறமையாக வெளிப்படும்.

அரசு தாயுள்ளத்தோடு இத்திட்டத்தை தொடங்கி உள்ளது. அதிகாரிகள், ஆசிரியர்கள், சமையல் செய்யும் சகோதர, சகோதரிகளும் தாயுள்ளத்துடன் இதை தொடர்ந்து நடத்த வேண்டும்.

கடந்த ஓராண்டில் சுமார் 10 லட்சம்குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில் 92 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருப்பதாக கண்டறியப்பட்டு, அவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்தசிறப்பு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதனால், சுமார் 62 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

மாணவ, மாணவிகள் எதை பற்றியும் கவலைப்படாமல் தொடர்ந்து படிக்க வேண்டும். கல்வி கற்க எந்த காரணமும் தடையாக இருக்க கூடாது. இதில் அரசு உறுதியாக உள்ளது. படிப்பு மட்டும்தான் யாராலும் பறிக்க முடியாத சொத்து. அத்தகைய சொத்தை உங்களுக்கு நீங்களே சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களது மற்ற கவலைகள், தேவைகளை நிறைவு செய்ய தமிழக அரசு இருக்கிறது. இவ்வாறு முதல்வர் பேசினார்.

நிகழ்ச்சியில், எம்.செல்வராஜ் எம்.பி., நாகை மாலி எம்எல்ஏ, ஆதிதிராவிடர் வீட்டுவசதி, மேம்பாட்டு கழக தலைவர் மதிவாணன், மீன் வளர்ச்சி கழக தலைவர் கவுதமன், ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை செயலர் பி.செந்தில்குமார், சமூகநலம், மகளிர் உரிமை துறை செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு, ஊரக வளர்ச்சி,ஊராட்சி துறை இயக்குநர் பா.பொன்னையா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் எஸ்.திவ்யதர்ஷினி, சமூகநலத் துறை கூடுதல் இயக்குநர் எஸ்.பி.கார்த்திகா, நாகை ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்து வளர்ந்த வீட்டுக்கு முதல்வர் ஸ்டாலின் சென்றார். தொடர்ந்து, ஆட்சியர் அலுவலகத்தில் முதல்வர்

தலைமையில் சட்டம் - ஒழுங்கு குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று மாலை நடந்தது. இதில்,திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி., தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய 4 மாவட்ட எஸ்.பி.க்கள், காவல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**'பசிப்பிணியையே அறியக் கூடாது':** இதற்கிடையே, முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'திருக்குவளையில் வரலாற்றின் புதியதொடக்கம். நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி 2021 வரை மதிய உணவு திட்டங்களே இருந்தன. நூற்றாண்டுகள் கடந்து காலை உணவு திட்டம் தொடங்கியுள்ளோம். முதல்வரின் காலை உணவு திட்ட விரிவாக்கம் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் பசியாற்ற உள்ளது. என் அழைப்பை ஏற்று தங்கள் தொகுதிகளில் திட்டத்தை தொடங்கி வைத்த மக்கள் பிரதிநிதிகளுக்கு நன்றி. பசிப்பிணி என்பதையே மாணவர்கள் அறியக் கூடாது. அறிவுப்பசி ஒன்றே அவர்களுக்கு வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

**டெல்லி ஜி-20 மாநாட்டு முகப்பில் வைப்பதற்காக சுவாமிமலையில் இருந்து டெல்லி சென்ற 28 அடி உயர பிரம்மாண்ட நடராஜர் சிலை**



சுவாமிமலையிலிருந்து நேற்று டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்ட நடராஜர் சிலை.

**கும்பகோணம்:** டெல்லியில் அடுத்த மாதம் நடைபெறும் ஜி-20 மாநாட்டு முகப்பில்வைப்பதற்காக, சுவாமிமலையிலிருந்து நேற்று பிரம்மாண்டமான நடராஜர் சிலை டெல்லிக்குகொண்டு செல்லப்பட்டது.

டெல்லியில் செப். 9, 10-ம் தேதிகளில் ஜி-20 மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டு அரங்கின் முகப்பு பகுதியில் பிரம்மாண்ட நடராஜர் சிலையை அமைக்க, மத்திய அரசின் கலாச்சாரத் துறையின் கீழ் இயங்கும் இந்திரா காந்திதேசிய கலை மையம் முடிவு செய்தது. இதையடுத்து, கும்பகோணம் வட்டம் சுவாமிமலையில் உள்ள ?தேவ சேனாதிபதி சிற்பக் கூடத்துக்கு இதற்கான பணி வழங்கப்பட்டது. ஸ்தபதிகள் தேவ.ராதாகிருஷ்ணன், தேவ.?கண்டன், தேவ.சுவாமிநாதன் உள்ளிட்டோர் சிலையை வடிவமைக்கும் பணியை மேற்கொண்டனர்.

இந்நிலையில், டெல்லி இந்திரா காந்தி தேசிய கலை மையத் தலைவர் ஆர்த்தல் பாண்டியா தலைமையிலானஅலுவலர்கள் ஜவகர் பிரசாத், மனோகன் தீட்சத் ஆகியோர் நேற்று சுவாமிமலை வந்து,நடராஜர் சிலையை ஸ்தபதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

பின்னர், முழுவதும் துணியால் போர்த்தப்பட்டிருந்த இந்த சிலை, 5-க்கும் மேற்பட்ட பொக்லைன் இயந்திரங்கள் மூலம் லாரியில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து, பலத்தபாதுகாப்புடன் புறப்பட்டு, உளுந்தூர்பேட்டை, சேலம், பெங்களூரு வழியாக டெல்லிக்கு வரும் 28-ம்தேதி சென்றடைகிறது. முன்னதாக, சுவாமிமலையிலிருந்து புறப்பட்ட இந்த சிலையை அப்பகுதி மக்கள்மலர்கள் தூவி வணங்கினர்.

இது தொடர்பாக சிலையை வடிவமைத்த ஸ்தபதிகள் கூறியதாவது: தற்போது இந்த சிலையின் 75 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. சிலைக்கு மெருகூட்டுவது, கண் திறப்பு போன்ற மீதமுள்ள 25 சதவீத பணிகள் டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்ட பின் மேற்கொள்ளப்படும். இதற்காக15 ஸ்தபதிகள் இங்கிருந்து விமானத்தில் டெல்லி செல்கின்றனர்.

**25 டன் எடை:** செம்பு, பித்தளை, இரும்பு, ஈயம்,தங்கம், வெள்ளி, வெள்ளீயம், பாதரசம் ஆகிய 8 உலோகங்களைக் கொண்ட அஷ்ட தாதுக்களால் இந்தசிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலை 28 அடி உயரம்,21 அடி அகலம், 25 டன் எடை கொண்டது. இதன் மதிப்பு சுமார்ரூ.10 கோடி. உலகத்திலேயே மிகப் பெரிய நடராஜர் சிலை, இந்த சிலையாகத்தான் இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



EVA STALIN IAS ACADEMY

**நிலவில் சந்திரயான்-3 லேண்டர் தரையிறங்கிய இடத்துக்குப் பெயர் 'சிவசக்தி' - பிரதமர் மோடி அறிவிப்பு**

**பெங்களூரு:** நிலவில் லேண்டர் விண்கலம் தரையிறங்கிய இடத்துக்கு 'சிவசக்தி பாயின்ட்' (Shiv Shakti Point') எனப் பெயர் சூட்டப்படுவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றிக்கு காரணமான இஸ்ரோ விஞ்ஞானிகளை வாழ்த்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி வெளிநாட்டில் இருந்து நேரடியாக இன்று (சனிக்கிழமை) காலை பெங்களூரு வந்தார். பெங்களூருவில் உள்ள இஸ்ரோ மையத்துக்குச் சென்றார். அப்போது விஞ்ஞானிகள் அனைவரையும் பிரதமர் வெகுவாகப் பாராட்டினார். பிரதமர் மோடிக்கு லேண்டர் எடுத்தப் புகைப்படங்கள் பரிசாக வழங்கப்பட்டன. பிரதமரிடம் லேண்டர் விண்கலனின் மாதிரியை திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் வழங்கினார். அவருக்கு பிரதமர் மோடி கைகொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர் அங்கு விஞ்ஞானிகள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மோடி, "நிலவில் கால் பதித்த 4-வது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்கும், அர்ப்பணிப்புக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டின் பெருமையை, கவுரவத்தை நாம் உலகத்துக்கே நிரூபித்துள்ளோம். லேண்டர் தரையிறங்கிய இடம் இனி 'சிவசக்தி பாயின்ட்' என்றழைக்கப்படும்.

நிலவில் லேண்டர் தரையிறங்கிய தினம் (ஆக.23) ஆண்டுதோறும் தேசிய விண்வெளி தினமாகக் கொண்டாடப்படும்" என்றார். கடந்த 2019 ஆம் ஆண்டு நிலவில் சந்திரயான்-2 லேண்டர் விழுந்து நொறுங்கிய இடத்துக்கு 'திரங்கா பாயின்ட்' எனப் பெயர் சூட்டப்பட்டது என்பதையும் பிரதமர் தெரிவித்தார்.

**ஸ்மார்ட் சிட்டி போட்டியில் இந்தூர் நகரம் முதலிடம்: 2, 3-வது இடங்களை பிடித்த சூரத், ஆக்ரா**

**புதுடெல்லி**: தேசிய ஸ்மார்ட் சிட்டிக்கான விருதுகள் போட்டியில் இந்தூர் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை நாடு முழுவதும் மத்திய அரசு அமல்படுத்தி வருகிறது. இந்த நகரங்களில் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், நவீன வசதிகள், வைஃபை, இன்டர்நெட் இணைப்பு போன்ற இணைய வசதிகள், நவீன சுகாதார வசதிகள் உள்ளிட்டவற்றை மத்திய அரசு அமைத்து வருகிறது.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ்மேம்படுத்தப்பட்ட நகரங்களிடையே போட்டியையும் மத்திய அரசு ஏற்படுத்தி வருகிறது. 4-வதுஆண்டாக நடைபெற்ற இப்போட்டியில் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த இந்தூர் நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. கரோனா காரணமாக 2021-ம் ஆண்டு இந்த போட்டிநடத்தப்படவில்லை. தற்போது நடத்தப்பட்ட போட்டி 2022-ம் ஆண்டுக்கானது ஆகும்.இந்த போட்டியில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தசூரத் 2-வது இடத்தையும், உத்தரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஆக்ரா 3-ம் இடம் பிடித்துள்ளது.

விருது பெற்ற நகரங்களுக்கு இந்தியா ஸ்மார்ட் நகரம் போட்டி விருதுகளை (ஐஎஸ்ஏசி) குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு செப்டம்பர் 27-ம் தேதி இந்தூரில் நடைபெறும் விழாவில் வழங்கஉள்ளார்.

**தமிழ்நாடு 2-ம் இடம்:** ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் 2-வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்த வரிசையில் முதலிடத்தை மத்தியபிரதேசம் பெற்றுள்ளது. 3-வது இடத்தை ராஜஸ்தான், உத்தரபிரதேச மாநிலங்கள் கூட்டாகப் பிடித்துள்ளன. யூனியன் பிரதேசங்கள் பட்டியலில் சண்டிகர் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தப் போட்டியை மத்திய அரசு 2015-ம் ஆண்டு தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

**ஐஎஸ்எஸ்எஃப் உலக சாம்பியன்ஷிப் - துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு மேலும் ஒரு தங்கம்**



**பாகு**: அஜர்பைஜானின் பாகு நகரில் ஐஎஸ்எஸ்எஃப் உலக சாம்பியன்ஷிப் துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் மகளிருக்கான 50 மீட்டர் பிஸ்டல் அணிகள் பிரிவில் சாக் ஷி சூர்யவன்ஷி, கிரண்தீப் கவுர் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 1,573 புள்ளிகளை குவித்து தங்கப் பதக்கம் வென்றது. இந்தத் தொடரில் இந்தியா வென்ற 6-வது தங்கப் பதக்கமாக இது அமைந்தது.

சீனா 1,567 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், மங்கோலியா 1,566 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் பெற்றன. மகளிருக்கான 50 மீட்டர் பிஸ்டல் தனிநபர் பிரிவில் இந்தியாவின் டியானா 533 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் வென்றார். அதேவேளையில் சாக் ஷி 531 புள்ளிகளுடன் 5-வது இடமும், கிரண்தீப் கவுர் 509 புள்ளிகளுடன் 11-வது இடமும் பிடித்து ஏமாற்றம் அளித்தனர்.

**வெண்கலம்:** ஆடவருக்கான 50 மீட்டர் பிஸ்டல் அணிகள் பிரிவில் கமல்ஜீத், விக்ரம் ஷிண்டே ஆகியாரை உள்ளடக்கிய இந்திய அணி 1,646 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் வென்றது. இதே போட்டியின் தனிநபர் பிரிவில் இந்தியாவின் ரவீந்தர் சிங் 556 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

EVA STALIN IAS ACADEMY